REGISTERED No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.
வீடுபெறநில்.

வெண்டாமரை ௫.	1917-ம் ௵ ஏப்ரல் ௴	இதழ் ௪.

பத்திராதிபர்:— சி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்,
புதுவை.

வருடச் சந்தா

உள்ளூரார்க்கு ரூ 1	வெளிநாட்டுக்கு ரூ 2
வெளியூரார்க்கு ரூ 1¼	தனிச் சஞ்சிகை அணா 2

உள்ளுறை.

பக்கம்.

புதுவைக் கலைமகள் கழகம் ௫-வது ஆண்டு விழாக் கொண்டாட்டம். 73

திசைப் பெயரின் ஆராய்ச்சி:— தமிழ்ப் பண்டிதர், மாகறல். கார்த்திகேய முதலியார். 76

சற்புத்திரன் சஞ்சலம்:— ஸ்ரீ சு. அ. சுப்பராயப்பிள்ளை. ... 79

தமிழர்கடமை:- ஸ்ரீ கு. ப. அ. க. சதாசிவம்பிள்ளை, அம்மளூர். 82

தமிழ் மருத்து:— மருத்துவன், ஸ்ரீ திரு. சுப்பிரமணியனார். 85

காவித்தண்டலம் சைவசித்தாந்த சபையின் ஐந்தாவது வருடமஹோற்சவம்:— சைவாபிமானி. 89

சபை ஸ்தாபகம்:— கண்டு களித்தோன். 91

படிக்காசுப்புலவர் சரிதம்:— ஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியார், கோயமுத்தூர். 91

புதுவைக் கலைமகள் கழகத்தின் 6-வது ஆண்டு விழாக் கொண்டாட்ட நாள் சிறிது தள்ளிவைக்கப்பட்டது.

மேற்படி கழகத்தின் 6-வது ஆண்டு விழாக் கொண்டாட்டம், சில அசந்தர்ப்பத்தால், முன் குறிப்பிட்ட நாளிலன்றிச் சிறிது தள்ளிவைக்கப்பட்டது. அதாவது: 1917-ம் ஆூ ஜூன் மீ 7, 8, 9, 10 இந் நாட்களிலேயாம்.

தி. திருப்புளிசாமி ஐயர்,
கழகக் காரியதரிசி.

சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு.

1917-ம் ஆூ ஜூன் மாதத்தில் நடைபெறும் நமது கலைமகள் கழகத்தின் 6-வது ஆண்டு விழாக் கொண்டாட்டம் காரணமாக, மே, ஜூன் மாதக் கலைமகள் இரண்டும் ஒன்றுசேர்ந்து, ஜூலை மாதத்தில் வெளியாகும். அன்பர்கள் பொறுக்க.

ப—ர்.

உ

ஸ்ரீ வாணீசகாயம்.

கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்

மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ௫. | 1917-ம் ஆ௵ ஏப்ரல் ௴ | இதழ் ௪.

புதுவைக் கலைமகள் கழகம்.

௬-வது ஆண்டு விழாக் கொண்டாட்டம்.

பேரன்புடைத்த பெரியீர்!

நம் புதுவைக் கலைமகள் கழகத்தின் ஆறுவது ஆண்டு விழாக் கொண்டாட்டம், நிகழும் பிங்கள ௵ வைகாசி ௴ 25-ம் உ (7 – 6 – 17.) வியாழக்கிழமை முதல் நான்கு நாட்கள் வரையில், புதுவை, பொம்மையர்பாளையம் ஸ்ரீ பாலைய சுவாமிகள் மடத்தில், திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் சபைத் தலைவராக வீற்றிருக்க, அடுத்த பக்கங்களில் குறிக்கும் வகை நடைபெறும். தாங்கள் வந்திருந்து சிறப்புறுத்த வேண்டுகின்றனம்.

இங்ஙனம்,

கலைமகள் கழகம்
புதுவை
28 - 5 - 1917.

பு. அ. பெரியசாமிப்பிள்ளை,
கழகத் தலைவர்.

தி. திருப்புளிசாமி ஐயர்,
காரியதரிசி.

நடைபெறு முறை.

பிங்கள ஸு வைகாசி மீ 25-ம் உ (7 – 6 – 17) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு மணக்குள விநாயகர் திருக்கோயிலில் ஸ்ரீ விக்கினேசுவர பூசையும், இரவு 8 மணிக்கு அக்கிராசனுதிபதியாகிய ஸ்ரீ ஞானியார் மடத்துச் சுவாமிகளை வீதிவலமாக வரவேற்றலும்.

உசு-ம் உ (8 – 6 – 17) வெள்ளிக்கிழமை

மாலை,

முதல்—வரையில்.

4 — 4½ "கடவுள் வாழ்த்தும், வந்தனோபசார பத்திரம் படித்தலும்."

4¾ – 5 "அறிக்கைப் பத்திரம் வாசித்தல்."

5 — 6 "சபைத் தலைவர் முன்னுரை."

6 — 7 "இப்பொழுது" ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப்பிள்ளையவர்கள், புலிசை ஸ்ரீ ஞானியார் மாணவர் கழகம் காரியதரிசி, திருக்கோவலூர்.

7 — 8 "பிறப்பிறப்பும், நிவிர்த்தியும்" ஸ்ரீமத் ஷண்முகாநந்த சுவாமிகள், யோகாநந்தமுனி ஆசிரமம், சென்னை.

8 முதல் சபைத் தலைவர் முடிவுரை.

உஎ-ம் உ (9 – 6 – 17) சனிக்கிழமை

காலையில் மகேசுர பூசை.

மாலை,

முதல்—வரையில்.

4½ – 5 "கடவுள் வாழ்த்து."

5 — 5¾ "சிவஞான முனிவர்" ஸ்ரீமான் பாரிப்பாக்கம் – கண்ணப்ப முதலியாரவர்கள். (மணி - திருநாவுக்கரசுமுதலியார் மாணவர்.)

5¾ – 7 "சிலப்பதிகாரம்" ஸ்ரீமான் திரு - வி. கலியாணசுந்தர முதலியாரவர்கள், வெஸ்லி காலேஜ் தமிழ்ப் பண்டிதர், சென்னை.

7 — 8 "தாயுமானூர் கொள்கை" ஸ்ரீமான் மயிலை - சோமசுந்தாமுதலியாரவர்கள், சைவப் பிரசாரகர், சென்னை.

8 — 8¾ "வாழ்க்கைத் துணை நலம்" ஸ்ரீமதி த. பதுமாவதியம்மையவர்கள், சென்னை.

8¾ முதல் சபைத்தலைவர் முடிவுரை.

உ௮-ம் வ (10 - 6 - 17) ஞாயிற்றுக்கிழமை

காலை,

முதல்—வரையில்.

7½ – 8 "கடவுள் வாழ்த்து."

8 — 9 "உயர் குலத்தோர்" ஸ்ரீமான் A. V. முத்தையமுதலியாரவர்கள் F. T. S., செக்ரெத்தாரியா ஜெனெரால், புதுவை.

9 — 10 "இராமலிங்க சுவாமிகள்" ஸ்ரீமான் மோ. கந்தசாமி முதலியாரவர்கள் B. A., Accountant General's Office, சென்னை.

மாலை,

3½ – 4 "கடவுள் வாழ்த்து."

4 — 5 "ஜீவகாருண்யம்" ஸ்ரீமான் இ. சுப்பிரமணிய முதலியாரவர்கள், தமிழ்ப் பண்டிதர், தொண்டை மண்டலம் பாடசாலை, சென்னை.

5 — 6 "திருக்கோவையார் அழகு" ஸ்ரீமான் மணி-திருநாவுக்கரசுமுதலியாரவர்கள், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்பண்டிதர், சென்னை.

6 — 7 "சகோதரத்துவம்" ஸ்ரீமான் திரு - வி. கலியாணசுந்தரமுதலியாரவர்கள், வெஸ்லி காலேஜ் தமிழ்ப் பண்டிதர், சென்னை.

7 — 8 "பக்தி" பண்டிதை ஸ்ரீமதி கிருஷ்ணவேணியம்மையவர்கள், சென்னை.

8 முதல் சபைத் தலைவர் முடிவுரை முதலியன.

திசைப் பெயரின் ஆராய்ச்சி.

(காலஞ்சென்ற தமிழ்ப் பண்டிதர்,
மாகறல் கார்த்திகேய முதலியார் எழுதியது.)

கிழக்கு.

எல்லா வுயிர்களுக்கும் ஒளியில் விருப்பமுண்டாவது இயல்பாதலால் முதல்முத லுண்டான திசை, ஒளியின் தோற்றமுடைய கிழக்குத் திசையேயாகும். கிழக்கென்பதற்கும் ஒளியுண்டாகும் திசையென்றே பொருள். கில் = ஒளி. ஒளியாவது சூரியன்.

மேற்கு.

சூரியனிலும் சிறந்த ஒளியுடைப் பொருள் இல்லாமையால் சூரியன் தோன்றும் கீழ்த்திசையை ஒருவன் நோக்கி வீற்றிருக்குங்கால், அவன் பின்புறம் மேற்காகின்றது. மேற்கின் பெயர் பின்புறத்தை யுணர்த்தும் வேன் என்னும் சொல்லிருந் துண்டாயது.

வெற்கு மேற்காயிற்று.
வகரம் மகரமாகும்.
வென் – பின்புறம். வென் – வெற்கு.
வெற்கு – வெஸ்டு (ஆங்கிலம்) – மேற்கு.

தமிழில் னகரமுண்டான பிறகு வேந் என்பது வேன் ஆயிற்று. "வென்னுரு மென்பு விருத்திரனுக்கா வுதவி" (காந்தம் ௬ கூ-ம் ௪௮.) மேற்குக்கு முதல்முத லுண்டான பெயர் குடதிசை. குடம் – மறைபு. சூரியன் மறைகின்ற திசையென்பது பொருள்.

"குடக்குன்றிவிட்ட விளக்கதுவாமே" (திருமந்திரம்)

தெற்கு.

அவன் வலப்புறம் சூரியகலையாதலால் தென்றிசைக்குச் சூரிய திசையெனப் பெயருண்டாயது.

௧. சூரியன் = ஞாயிறு, சோழன்.
௨. சோலம் – சோலன் – சோளன் – சோழன்.
௩. சுல் – சோலம் = தெற்கு.
௪. சுல் = சூரியன்.

சோலம் – சோனகம் – சோழகம் = தெற்கு.
வலவன் - வளவன் = சோழன்.
வலம் – வலவன். வலப்பக்கம் = தெற்கு.

அரசாட்சி முதல் முதல் தென்றிசையிலுண்டானபடியால் அரசாள்வோன் பெயர் அத்திசைப் பெயராலுண்டாயது.

சூரியன் என்பது முதல் ஞாயிற்றையும் பிறகு தென்றிசையையும் அதன் பிறகு அரசனையும் உணர்த்திற்று. பிறவு மன்ன.

தெங்கம், தெங்கணம், தெக்கணம், தெச்சணம், தெட்சணம், தக்கணம், தச்சணம், தட்சணம், தெக்கு, தெற்கு முதலிய தென்றிசைப் பெயரெல்லாம் சூரியன் சம்பந்தமாகிய சொல்லிலிருந்தே யுண்டாயின.

சோதி – சௌத் (ஆங்கிலம்) = தெற்கு.
சோதி = சூரியன்.

வடக்கு.

அவனிடப்புறம் சந்திரகலையாதலால் வடதிசைக்குச் சந்திரதிசையெனப் பெயருண்டாயது. நிகண்டு நூலார் வடதிசையை மதிதிசையென்பர். "வடக்கின் பெயரே மதி திசையுமாகும்" (பிங்கல நிகண்டு)

நந்தை – நார்த் (ஆங்கிலம்) = வடக்கு.

நந்தை – சந்திரன் முதற்பக்கம் – சூரியகலைக்குப் பிங்கலையென்றும், சந்திரகலைக்கு இடகலையென்றும் பெயராம். இதனால் சூரியன் சொல்லில் தெற்கின் பெயரும், சந்திரன் சொல்லில் வடக்கின் பெயரும் உண்டாயின என்பது வலியுறுகின்றது.

சோதிடநூல் வழக்குப்படி சூரியன் ஆண்பாலும் சந்திரன் பெண்பாலும் ஆதலால், சூரியகலையாகிய வலப்பக்கத்தில் ஆண் பிண்டந் தரிக்கும், சந்திரகலையாகிய இடப்பக்கத்தில் பெண்பிண்டம் தரிக்கும். சூரியவோரையில் ஆணும் சந்திரவோரையில் பெண்ணும் பிறக்கும்.

வடதிசைக்கு முதல் முதலுண்டான பெயர் உத்தரமென்பதாம். உத்தரமென்பது உத்தாமாயிற்று. உத்தரமென்பதற்கு மிகுந்த கடலுடைய திசையென்பது பொருள். உதம் – கடல். தரம் – மிகுதி. விந்தய மலைமுதல் இமய மலைவரையில் கடலாக இருந்தமையின் வடதிசைக்கு உதகரமெனப் பெயருண்டாயது. வடதிசைக்கு உதக்கு என்னும் மற்றோர் பெயராலும் அது வலியுறுகின்றது. உதம் – உதக்கு = வடக்கு. உதம் = கடல். உதக்கு உதீசியாயிற்று. உதீசி ஊசியாயிற்று. உதீசி ஊசியென்பவை வடதிசையின் பெயர். உத்தரம் உதக்கு என்னும் வட

திசைப் பெயர்களைத் தென்றிசையிலிருந்தவர்கள் வைத்தனரென்பதற்குச் சிறிதும் ஐயுறவில்லை.

தென்றிசையிலிருந்தவர்கள் தமிழர்களே. உதமென்பது பதாறு சந்தான தீபிகைப்படி வடசொல்லெனப்படாது.

இப்பெயர், விந்தய மலைமுதல் இமயமலைவரையில் இருந்த கடலானது சிறிது சிறிதாக ஒதுங்கி முழுதும் நிலமாகியும், மக்கள் வாசமில்லாத காலத்து உண்டானதெனக் கொள்ளவேண்டும். அரசன் எல்லாராலும் அறியப்பட்டவன் ஆதலால் அவன், போரில் புறப்புண்பட்ட காலத்து மக்கள் சஞ்சாரமில்லாத வடதிசையில் நாணத்தினால் ஒளிந்து நாள்கழித்து வந்தமையால் அத்திசைக்கு வடக்கெனப் பெயர் வந்தது. வடு – வடக்கு. வடு – புறப்புண், புறப்புண்பட்டோர் நாணி ஒளிந்து நாள் கழித்த திசையென்பது பொருள். அக் காலத்து வடதிசைதான் சனசஞ்சாரமில்லாத இடமாக இருந்ததெனப் புலனாகின்றது. புறப்புண்பட்டோரிற் சிலர் பட்டினிகிடந்தும் இறந்து பட்டனர். புறப்புண்பட்டோர் நாள்கழித்த திசையாகலின் வடக்கு வடக்கிருத்தலென்னும் பெயருண்டாயின.

“புறப்புண்ணாணி மறத்தகை மன்னன்
வான் வடக்கிருந்தன னீங்கு
நாள் போற் கழியல ஞாயிற்றுப் பகலே.”

(புறநானூறு. ௬௫. பாட்டு)

என்பதனால் அச் சரிதமுண்மை தெளிக. விந்தய மலைமுதல் இமயமலைவரையில் கடலிருந்ததென்பதற்குப் பல சான்றுகளுள்ளன. கடல் நாடாவதும் நாடு கடலாவதும் இயல்பு. விந்தய முதல் இமயம்வரை கடலாக இருந்த காலத்தில், இந்தியா, ஆபாலிகா, தென் அமரிக்கா, ஔத்திரா லியா என்பவை ஓர் நிலமாகவே யிருந்திருக்கவேண்டும்.

இதனால், முதல் முதலுண்டான திசை கிழக்கென்பதும், வடதிசையையுணர்த்தும் உத்தரம் உதக்கு என்னும் பெயர்களால் விந்தய முதல் இமயம்வரை கடலிருந்ததென்பதும், வடக்கு வடக்கிருத்தலென்னும் பெயர்களால் பிறகு கடலொதுங்கி நிலமாயிற்றென்பதும், மற்றைய திசையிலிருந்தவர்கள் தமிழர்களென்பதும், பிறகு வட திசையிலும் தமிழர்களே குடியேறினார்களென்பதும் பிறவும் பெறப்படுகின்றன. விந்தய மலையின் சிகரத்திலும் இமய மலைச்சாரலிலும் இப்பொழுதும் தமிழ்ச் சம்பந்த மிருக்கின்றது. கிழக்கு, மேற்கு, தெற்கு என்னும்

திசைப் பெயர்கள் நீரின்பெயராலமையாமல் வடதிசைப் பெயர் மாத்திரம் உத்தரம், உதக்கு என நீரின் பெயரால் அமைந்திருத்தலால் விந்தய முதல் இமயம்வரை கடலிருந்த தென்பதற்கு ஐயுறவில்லை. உத்தரம் உதக்கென்பன வடகடலெல்லையைக் குறிப்பன ஆகாவோ எனின், மற்றைய திசைகளிலும் கடலிருத்தலினால் அது பொருந்தாது. உத்தரமென்பதற்கு வேறு பொருள் கூறலுமொண்ணாது, கூறினும் அது பொருந்தக் கூறலென்னும் உத்தியின் பாற்படும். பிறபெயர்களின் ஆராய்ச்சியை மொழிநூலிற் கண்டுகொள்க.

சற்புத்திரன் சஞ்சலம்.

ஓர் சோகக் கதை.

(வெண்டாமரை ௨, இதழ் ௩, 58-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆசிரியனுரை:—

கலியாண வீட்டில் கலியாணப் பெண்ணுக்குக்கூட நிகழ்ந்திரா, அன்று முதல் சாவித்திரிக்கு அவள் மாமன் வீட்டில் ஏற்பட்ட உபசாரமும் பராமரிப்பும். அவள் விரும்பிக் கேட்டவை ஐந்தே ஐந்து உரிமைகள். ஆனால் அவள் பெற்றவைகளோ ஐம்பதுமாயினவென்னலாம். தினுசுதினுசாக, டஜன் டஜனாக, இரவிக்கைகள், புடவைகள், புத்தகங்கள், பத்திரிகைகள், உயர்ந்த சவர்க்காரக்கட்டி வாசனைத்தூள் முதலியவைகளுடன் தினசரி வெந்நீரில் ஸ்நானம், வாரமிருமுறை எண்ணெய் நீராடல், கண்களுக்கு மை, வாசனைத் தைலமிட்டுக் கூந்தலைச் சீவி ஜடைபின்னல், காலையில் காபி அல்லது தேயிலைப்பானத்துடன் சிற்றுண்டி, மத்தியானத்திலும் இரவிலும் நாலுவிதங்களுக்குக் குறையாத பதார்த்தங்களுடன் சூடு சாத உணவு, பிரதிதினமும் சரஸ்வதி பூஜைக்கு மல்லிகைப்பூ, குங்குமப் பொட்டு வெள்ளிக்கிழமைதோறும் சரஸ்வதிதேவிக்கு நிவேதிக்கப்பெற்ற சர்க்கரைப் பொங்கலுடன் போஜனம், வீட்டுச் செலவுக்காக ஏற்பட்ட சொற்பரொக்கங் கொண்டிருக்கும் பெட்டியின் சாவி வைத்திருத்தல், இந்தப் பெட்டிப் பணத்தை நினைத்தவாறெல்லாம் செலவுசெய்தல், அன்னபூரணி எழுதும் வீட்டுக் கணக்குகளைச் சரிபார்த்தல்,—இவ்வளவும் இன்னும் பலவும் உற்றனள் அந்தக் கன்னிகைக்கைம்பெண். சமையலறைக்

குச் செல்லுவதற்கு அவளுக்குச் சந்தர்ப்பமே கிடைக்கிறதில்லை. ஹூம் என்று அவன் ஒரு மூச்சு விடுவதற்குள் அவள் அருமை அண்ணி அன்னபூரணியம்மாள் அதிர்ந்து பதறி எழுந்து விழுந்து ஆயிரம் பணி செய்யலாயினள். பல் துலக்கப் பற்பொடியும் நீரும் கையிலெடுத்துக் கொடுக்கவும் பள்ளிகொள்ளப் படுக்கை விரித்தமைக்கவும் அந்த அண்ணி முன்னின்றாளென்றால் அவளுடைய மற்ற உபசாரங்களை விவரிப்பானேன். சாவித்திரியினுடைய மாமனோ — அவளுடைய சொந்த அன்னையினிடத்தினின்று கூட எழுதற்கரிய ஓர்வித நூதன மெல்லிய குரலில், "சாவித்திரியம்மா! சாவித்திரியம்மா!! சாவித்திரியம்மா!!!" என்று அவளை விளிக்கலாயினன். அவ்விதமாக அவளை அழைத்து, இனி அவள் மஞ்சள் பூசிக்கொள்ளுமாறும் மல்லிகைப்பூச் சூடிக்கொள்ளுமாறுங்கூட ஒரு நாள் அவளை வேண்டிக்கொண்டான். சரஸ்வதிக்குச் சூடிய மல்லிகைப் புஷ்பங்களைப் பூஜை முடிந்து சிறிதுநேரத்திற்குப் பிறகு எடுத்து அன்னபூரணியின் அளகத்திலேயே சூட்டுவள் நமது பெண்மணி. ஆனால் அப்படிச் சூட்டுதற்கு முன்பு ஒரே ஒரு மலரை மாத்திரம் எடுத்து ஒருவருக்குந் தெரியாமல் தன் கூந்தலில் மறைத்துச் சொருகிக்கொள்வாள். தாய்க்குச் சூட்டிய திருமலரைத் தான் சூடவேண்டுமென்று பக்தியினால் எழுந்த பிரேமை அது. துல்லிய இரவிக்கை துல்லிய புடவை தரித்திருத்தல் வாசனைத் திரவியங்களுடன் தினந்தோறும் நீராடல், கண்ணுக்கு மையிட்டுக்கொள்ளல், குழல்சீவிக்கொள்ளல், இவைகளினால் அவள் மனம் ஒரு ஆர்வத்தை, ஒரு குதூகலத்தை ஒரு உற்சாகத்தை உற்றது. அவ்வாறு உற்றது அவள் பக்தியின் உருக்கத்தைத்தான் அதிகரிக்கச் செய்தது.* ஆகையால் பூச்சூட, முக்கியமாய், தாய்க்குச் சூட்டிய பூச்சூட அவளுக்கும் பிரியமில்லாமலில்லை. என்றாலும், அதை நினைக்க அவள் மனம் பதறிற்று. "ஐயோ! பொது ஜன வழக்கத்திற்கு விரோதமாக நான் குங்குமப்பொட்டு இட்டுக்கொள்ளுகிறேன். இனிச் சரஸ்வதி

அடிக்குறிப்பு. * இவ்விடத்தில் கதாநாயகன் கூறும் குறிப்புரையைக் கவனியுங்கள்:—

"துல்லிய உடைகள், வாசனைப்பொருள்கள் முதலியன, காமம் என்ற கசட்டுக் கிளர்ச்சியின் கம்பனத்தையே தூக்கும் என்பது பலர் கருத்து. அவை தெய்வபக்தியின் உருக்கத்தைப் பெருக்கும் அதிசயத் தன்மை என்பது என் சொந்த அநுபவம். சாவித்திரியும் அதையே சாற்றினாள். கதாநேயர்களில், இந்த எங்கள் அநுபவ உண்மையை ஒப்புவார் பலரோ! உந்துவார் பலரோ!

பூஜையைக் காரணமாகக் கொண்டு மலரும் அணிந்தால் என்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்" என்று அஞ்சினாள். ஆகையால் தான் முற்கூறிய படி ஒரே ஒரு பூவை யாருமறியாமல் சூடிக்கொள்வாள். அவள் பக்தியே பக்தி! அவள் பேதைமையே பேதைமை. இப்படி ஒளித்து நின்று ஒரு மலர்புனைவதைக் களித்து நின்று கண்டுவிட்டான் ஒரு நாள் ஜீவரத்தினம். உடனே அவ்விஷயத்தை அவன் தன் அன்பிற்குரிய அன்னபூரணிக்கு அந்தரங்கமாகக் கூறினான். அன்னபூரணி, தானே கண்ணாற் கண்டதாகத் தன் தந்தைக்குச் சாற்றினாள். அதன் பிறகுதான், இரத்தினசாமி, மல்லிகைப்பூச் சூடுமாறும், மஞ்சளும் அணியுமாறும் தன் மருகி சாவித்திரியை வேண்டினான். ஆனால் அவள் கண்டிப்பாக மறுத்துவிட்டாள்.

தன் மாமன் குணம் கொள்கை முதலியவை மாறியது சாவித்திரிக்கு ஆச்சரியமாகவேயிருந்தது. யௌவனச் சுமங்கலிகள்கூடச் சற்று மினுக்காகத் தோன்றுவதைக்காண அவன் கண்ணும் மனமும் சகியா. வெட்கங்கெட்ட வேசையர்கள் என்று அவர்கள் அனைவரையுங் குறித்துப் பல உதாசின மொழிகளாற் காய்வான். அதே இரத்தினசாமி தன் மருகியாகிய கைம்பெண்ணுக்குப் பல சுதந்தரங்கள் அளித்ததோடு, இப்பொழுது மலரோடு மஞ்சளும் புனையும்படி வேண்டியது சாவித்திரியின் வியப்பைச் சிறிது வீக்கிற்று! மனத்துள் மறைத்துள்ள என்னவோ ஒரு உட்கருத்தோடு தன்பால் இவ்வளவு காருண்யங் காட்டுகின்றனனோ என்ற ஒரு ஐயம் அவள் மனத்தில் மெல்லிதாகப் படர்ந்தது. ஆனால் அக்கரந்த கருத்து இன்னதென்று ஊகிக்க அவளால் முடியவில்லை.

இவ்விதப் புதிய வாழ்வில் சாவித்திரியைக் கண்ட காலம் சுமார் ஒரு மாதமே. 'அந்தச் சுமார் ஒரு மாத காலத்திற்கு நாலைந்து நாட்களுக்கு முன்பு, அவள் மாமன் அவளைத் தனியாய் ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றான். தான் தன் புத்திரியின்பால் கொண்டிருப்பதைவிட அவள்பால் அதிக வாஞ்சையுற்றிருப்பதாகவும், அவள் கைம்பெண்ணாயிருக்கும் பரிதாபகர நிலைமைதான் தனது ஒரே தீராச் சஞ்சலமென்றும் பல பல கதைகள் கழறிப் பிரசங்கித்தான். கடைசியாகச் சாவித்திரிக்குச் சொந்தமான ஆஸ்திகளின் மூலமாகப் பேச்சைத் தந்திரமாக இழுத்தான். அந்த ஆஸ்திகள் யாவும் அவள் பெயருக்கு உரிமையாயிருப்பதால் அவைகளைப் பராமரிப்பதில் தனக்கு அதிக கஷ்டங்கள் இருக்கின்றனவென்றும், குத்தகைக்காரர்கள், பண்ணையாட்கள் முதலியோர் தன்னை மதிப்பதில்லை, தனக்கு அடங்கி நடப்பதில்லை என்றும், அவள் தந்தை தன் ஆஸ்தி அனைத்தையும் அவர் ஒரே புதல்வியாகிய அவளுக்கே உரிமையாக்கியது சரியல்லவென்று, அவரது தாயாதிகள் சிலர் ஆக்ஷே

பித்து, அவைகள் மீது தாங்கள் உரிமை பாராட்டி நியாயஸ்தலத்தில் வழக்கிட ஏற்பாடு செய்திருக்கிறார்களென்றும், ஆகையால் அவளுடைய சொந்த நலத்தைக் கருதி, அவள் தனது தாவர சங்கமப் பொருள்கள் அனைத்தையும் அவளுடைய மாமனாகிய தன் பெயருக்கு எழுதிக்கொடுத்து விட்டால், ஞாதிகள் ஒருவரும் அவைகளின்பால் உரிமைபாராட்ட முடியாதென்றும், மற்றும் பல சௌகரியங்கள் ஏற்படுமென்றும் சொல்லி மறுதினமே அவ்விதமாகப் பத்திரமெழுதிப் பதிவுசெய்விக்கத் தான் நிச்சயித்திருப்பதாகவும் கூறினன் சாவித்திரியின் மாமன்.

சாவித்திரி பேதைதான். அதாவது கபடற்றவள். ஆனால் அவள் அறிவிலியல்ல. அவள் புதிய வாழ்க்கையின் காரண மர்மம் பளிச்சென இப்பொழுது அவள் புத்திக்குத் துலங்கிற்று. உடனே, "என்ன கஷ்டங்கள்? எந்தக் குத்தகைக்காரர்? எந்தப் பண்ணையாள்? எந்தத் தாயாதி? எப்படி ஆக்ஷேபனை? எப்பொழுது? என்ன ஏற்பாடுகள்? அவை எப்படித் தெரிந்தன?" என்று, விஷயங்களையும் ஆசாமிகளையும் குறிப்பிட்டுத் திட்டமாகக் கூறும்படி பல பல கேள்விகள் கிளரலாயினள்.. கிளரக் கிளர, ஒன்றிற்கொன்று பொருத்தமற்றதாகப் புதிய பொய்களை உளறலாயினன் மாமன். அவன் உற்ற குழப்பத்தைப் பார்க்க, அவன் உளறியதைக் கேட்க, சாவித்திரிக்குச் சிரிப்பு பொங்கிவிட்டது. அதைக் கண்ட மாமனுக்குச் சீற்றம் பொங்கிற்று. கடுகடுத்த குரலில் தான் கேட்டதற்குக் கண்டிப்பான உத்தரங் கூறும்படி கேட்டான். "நான் ஒரு பத்திரமும் எழுதிக் கொடுக்க மாட்டேன்" என்று உறுதியாக உரைத்துவிட்டாள் சாவித்திரி.

(தொடரும்)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

---

† தமிழர் கடமை.

இப்பேரவைக்கண் ஓர் அரும் பெரும் விஷயம் உபன்னியசித்தல் எம்போலியர்க்கு நாணுத்தகவுடைத்தாயினும், நல்லாற்றுப்படுத்து நந் திருவருள்பெறும் விழைவே நிறங்கொடுத்ததென்னின், குற்றந் தவிர்த்துக் குணந்தருங் கடன் நும்பாலதேயன்றோ!

---

† இஃது திருச்செங்கோடு சைவ சமாஜத்தின் பத்தாம் ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாட்டகாலத்தில் எழுதியனுப்பப்பட்டது.

தமிழர் கடமை எனுஞ் சொற்றொடர், தமிழருடைய கடமையென ஆறும்வேற்றுமைத் தொகையாகவும், தமிழருக்குக் கடமையென நான்காம்வேற்றுமையாகவும், தமிழரும் கடமையும் என உம்மைத் தொகையாகவும் இயல்பாய்நின்று அவரின் இயற்கைச் சிறப்பை விளக்கியும், இன்னும் பல்வேறாகவும் விரியக்கிடக்கின்றது. ஆதலின் தமிழர் என்பார் யாவர்? கடமை என்பது யாது? தமிழர்க்குரித்தாய கடமை என்ன? என்னும் விஷயங்களை விசாரித்தலே இவ் வுபன்னியாசத்தின் உள்ளுறையாம்.

முதலிடைச் சங்கங்களை யழித்த பிரளயங்களாலும், மூவரசர்களுக்குள்ளுந் தொடர்ந்தெழுந்த பெரும் போர்களாலும், சமயக் கலகங்களாலும், ஆதிக்கிய பேதங்களாலும் இறந்தொழிந்த பல நூல்களில் எஞ்சிய எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்குகளன்றி, நம் நாட்டுச் சரிதங்களை நன்குணர்த்தும் சாதனங்களின்று. ஆயினும், தமிழர்கள் மேலான ஒழுக்கமுடையவர்கள் என்பதைப் பதினெண் கீழ்க்கணக்கும் பிற நீதிநூற்களும் விளக்குகின்றன. நிற்க, இந் நாட்டிற்குரித்தானோர் தமிழரேயென்பதும், ஆரியர்கள் பின்வந்து கலந்தனரென்பதும், (பதிற்றுப்பத்து.)

“இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோ னிறீஇத் தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபி னாரியர் வணக்கி
நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து”
கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவில் கானங் கணையிற் போகி
யாரிய வண்ணலை வீட்டிப் பேரிசை
யின்ப லருவிக் கங்கை மண்ணி

என்றதனுள் தெள்ளிதின் அறியக்கிடப்பினும், சங்கக்காலங்களுக்கு முன்னரே கூட்டுறவாகக் கிடந்தமையாலும், தம் மொழுக்கங்களை நீத்து ஆரியராசாரங்களைப் போலியாக்கொண்டமையாலும், இந்நாள் பல புலமையாளர்கள் பல்வேறுவிதமாய் முயன்றும், தமிழரைத் தனித்தறியவியலாது கிடக்கின்றது. எனினும் ஆரியர்கள் எனக் கூறும் பிராமணர்கள் தமிழர்களெனத் தம்மைக் கூற வெட்குவதனாலேயே ஒருவாறு ஆரியர்களெனக் கூறவோ ரல்லாதோர் யாரும் தமிழர்களெனத் துணிவுடன் கூறுதல் கூடும். அன்றியும், அதை விளக்கப்புகின் எடுத்த விஷயம் விட்டு வேறு புகுதலோடு ஜாதிய கலகங்கட்கு மிடந்தரு மாதலானும் இத்துடன் நிற்றலே தகுதியுடையதாகும். கடமை, கடன்,

அறம் என்பன ஒரு பொருட்சொற்கள். மனிதர் யாவரும் உண்மை அன்பு நீதி எனுங் குணங்களுடன் பற்றிநிற்கும் இயற்கைத்தன்மையுடையராதலான், மனம் வாக்கு மெய்களான் உதவிபுரிதலும் பெறுதலும் உண்மையெனல் பெறப்படும். இதுபற்றி யன்றே கடவுளைக் கருணாநிதியெனவும், சிவகாருண்யம் அவசியம் எனவும் அறிஞர்கள் வற்புறுத்தி வருகின்றனர். இக் கடமை தனக்கும் பிறர்க்கும் என இருவகைப்படும் உறவினர், நாட்டினர், உலகத்தினர் முதலியோர்க்குப் புரிதலெனப் பல திறப்படுத்திக் கூறுவாருமுளர். இதைச் சைவ சித்தாந்தம் குருலிங்க சங்கம பக்தியெனக் கூறுகின்றது. இக்கடமையைப் புரியாதோர் தெய்வ அபாத்திரர்கள் ஆவதுமன்றி, ஒழுக்கத்தைக் கெடுத்துத் தம் முயிரையுங் கொலைபுரிவோராவர். இதுபற்றியன்றோ ஞானசம்பந்தரும், "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என அருளினர். இப் பொதுநோக்குக்கிடப்ப, தமிழர் கடமையைப்பற்றி ஆராயப்புகுமுன், அவர்களின் பண்டைய நிலைமையை அறிதல்வேண்டும். கடமையை மேல் கீழ் எனவும், உரியது உரியதன்றெனவும் பகுக்கச் செய்யும் பிறப்பால் எழுந்த ஜாதிப் பிரிவுகள் தமிழர்க்கின்று. ஆயினும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்நிலப்பிரிவாலும், "துடியன் பாணன் பறையன் கடம்பனென் றிந்நான் கல்லது குடியுமில்லை" எனத் தொழில் வேறுபாட்டாலும் எழுந்த ஜாதிகளன்றிப் பிறிதின்று. வேளாளர் எனும் பதம், வேள் + ஆண்மை வேளாண்மை எனவும் நிற்றல் கண்டு நச்சினார்க்கினியரும், உழுதுண்போரும் உழுவித் துண்போருமென வேளாளர் இருவகைப்படுவர் எனக் கூறினதினாலும், இவ் விருவகைத் திறத்துள் உலகத்தைப்பொருந்த அடக்குதல் கூடுமாதலானும், பண்டைக்காலத்தில் எவ்வகைச் சாதிப் பிரிவையும் கூறாது விட்டதினாலும், தமிழகத்து ஒரே வகுப்பினரே வதிந்திருத்தல் வேண்டுமென்றும் அவர்கட்கு வேளாளர் என்னும் பெயரே வழங்கியிருத்தல் வேண்டுமெனவும் நான் நினைக்கின்றேன். நிற்க, அவர்கள் முத்திக்கு வித்தெனும் ஒழுக்கம் நிறைபெறநிற்கும் பாஷையைத் தக்க நிலையிலிருத்தி, எப்பாஷையினரும் விரும்பத்தக்கதாய் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்னும் ஐந்திலக்கணங்களையும் அவற்றினுக்கு இலக்கியங்களாகப் பற்பல நூற்களையும் அமைப்பித்துள்ளனர். அவர்களின் உள்ளக் கிளர்ச்சியும், புறத்தொழிற் கிளர்ச்சியுமன்றோ, உடனே கெடும் இவ்வுலக மலர்களைப்போலாது என்றுங்கெடாத வெழிலுடனும் வாசனையுடனும் உள்ள தெய்வ மலர்போன்று, தமிழர்களுக்கு அன்றி ஏனையோர்களுக்கும் இயல் தெரிப்பான் எண்ணி, கனந்தங்கிய பரோடா

மகாராஜா அவர்களின் அறிவையும் மயக்கி ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பித்தல் வேண்டுமென்னும் ஆர்வத்தையுங் கொடுத்த இளஞ் சூரியனென நிலவுகின்ற அகப்பொருளெனவும் புறப்பொருளெனவும் பெரு நூல்களாகக் கிடக்கின்றன. அன்றியும், அவர்கள் கல்வியை அபிவிருத்தி செய்ததுமன்றி, சங்கங்கள் ஸ்தாபித்து, "தேய்தலுண் மையும் பெருகலுண்மையும் மாய்தலுண்மையும் பிறத்தலுண்மையும் அறிந்த புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலனேவா வான வூர்தி யெய்துப வென்பதஞ் செய்வினை முடித்தென"க் கூறியவாறு, புலவர்களின் திறனுணர்ந்து இம்மைப் பொருளாகிய செல்வ முதலியன வும் அம்மைப் பொருளாகிய முத்தியை அதன் வழியடைய ஆறுயு மிருந்தனர். இவைகளன்றோ புறப்பொருள், அகப்பொருள், பதிற்றுப் பத்து முதலிய அழியாப் புகழ்களாய் நிற்கின்றன.

(தொடரும்.)

கு. ப. அ. க. சதாசிவம்பிள்ளை,

அம்மனூர்.

தமிழ் மருத்து.

மக்கட்கு நோய் உண்டாவதற்குப் பலகாரணங்களிருந்தாலும், முக்கியமாக உணவு, உறக்கம், புணர்ச்சி, மனமுயற்சி முதலியன அள விற்கு மிகுதலினாலேயே நோய்கள் உண்டாகின்றன. அவை குறைந்தா லும், அவை யில்லாமலே இருந்தாலுங்கூட நோய்கள் உண்டாகும். இவை களையன்றி, தாய்வழி, தந்தைவழி முதலிய சேர்க்கைகளினாலும் நீர், உணு முதலியன நோயாளிகளிடமிருந்து பொருந்தவதினாலும் தொற்றும் என்க. அத்தொற்று நோய்களுள் வெப்பு நோயே மிக்க கொடுமை வாய்ந்தது. அந்நோய் நமது பரதகண்டத்தில் பத்துப் பதினைந்து யாண்டுகளாகப் பல மக்களைக் கொன்றுகொண்டே வருகின்றது. குரு வும், மாக்கழிச்சலும் அஃதே போன்று பன்மரிக்களைக் கொல்லுந் தன் மையுடையன. சிலப்பதிகாரம், "அன்று தொட்டுப் பாண்டியனாடே, மழைவறங் கூர்ந்து வறுமை யெய்தி, வெப்பு நோயுங் குருவுந் தொடர" என்று கூறியிருப்பதனாலும் உணர்க.

உலகத்து மாந்தர்க்குத் தோன்றும் எல்லா நோய்களும் ஒவ்வோர் காரணம் பற்றியே உண்டாகின்றன. அவை ஒவ்வொரு நாட்டு மருத்து

வர்களாலும் நுணுகி ஆராய்வதனல் அறியப்பட்டு விளங்குகின்ற செய்தியேயாம். அவற்றை யெல்லாம் குறித்து எழுதப்புகின் பெருகுமாதலின், இங்கு நோய்களை ஆராய்வதற்குரிய எண்வகை ஆராய்ச்சியைமட்டும் ஒருவாறு பேசத்தொடங்குவாம்.

எண்வகை ஆராய்ச்சியாவன:

நாம்பு, கண், குரல், உடம்பு, ஊறு, நாக்கு, பவ்வீ (மலம்), சிறுநீர் என எண்வகையினவாம்.

முதலாவது நாம்பு.

நாம்பு வளி நாம்பு, பித்து நாம்பு, ஐய நாம்பு என மூவகைப் படும், இவையன்றியும் குருநாடி, பூதநாடி என்னு இரண்டு நாம்புகளும் உண்டு. பூதநாடி ஒவ்வோர் போழ்தத்து, தெய்வமயக்கு முதலியன உண்டாம் போழ்தும், குருநாடி எப்போதும் நடந்துகொண்டு கிடக்கும். அவ்விரு குருவும் பூதமும் சிறப்புள்ளன வல்ல வென்பதனல் சில சித்தர்கள் கூறுதொழிந்தனர். குருநாடியைப் பற்றிச் சிலர் வற்புறுத்திக் கூறுகின்றனர். அந்த நாம்புகளைக் காலை, நண்பகல், மாலை என்ற போழ்துகளில் ஆராய்ந்து பார்க்கவேண்டும். வளி, பித்து, ஐயம் என்று நாம்புகளைப்பற்றித் தமிழ்ச் சித்தர்கள் கூறியவைகளில்பல வேற்றுமை யிருப்பினும், அவற்றுள் முக்கியமாய் மூன்று நாப்புகள் நடக்கவேண்டியமாதிரியைச் சில சித்தர்கள் குறித்திருக்கின்றனவற்றுள் சில கூறுவாம்.

அகத்தியர்.

க. வளி நாப்பு – அன்னம், கோழி, மயில்போல நடக்கும்.
உ. பித்து நாப்பு – ஆமை, அட்டைபோல நடக்கும்.
ங. ஐய நாப்பு – தவளை, பாம்புபோல நடக்கும்.

தன்வந்திரி.

க. வளி நாப்பு – குயில், அன்னம், கோழி, ஒனன் போலும்,
உ. பித்து நாப்பு – அட்டை, ஆமை போலும்,
ங. ஐய நாப்பு – தவளை, பாம்பு போலும் நடக்கும்.

திருமூலர்.

க. வளி நாப்பு – கோழி நடையைப்போலும்,
உ. பித்து நாப்பு – தவளை நடையைப்போலும்,
ங. ஐய நாப்பு – பாம்பு நடையைப்போலும் நடக்கும்.

தேரையர்.

க. வளி நரப்பு – அன்னம், கோழி, ஓணான், மயில் போலும்,
உ. பித்த நரப்பு – ஆமை, அட்டை போலும்,
ங. ஐய நரப்பு – தேரை, பாம்பு போலும் நடக்கும்.

இராமதேவர்.

க. வளி நரப்பு – கருங்குருவி, மான் வாற்றுடிப்பு, அன்னநடை, புறா நடை போலும்,
உ. பித்த நரப்பு – அழகான மயில் நடை போலும்,
ங. ஐய நரப்பு – தவளை, விட்டில் போலும் நடக்கும்.

உயுகிமுனி.

க. வளி நரப்பு – சிறு பிள்ளைத் தொட்டில், தவளைப் பாய்த்து, ஓணான், பாம்பு, அட்டை, ஊர்க்குருவி நடை, ஆமை நடை போலும்,
உ. பித்த நரப்பு – அன்ன நடை, மயில், தாரா, மாடப்புறா, ஊர்க்குருவி, கருடன் போலும்,
ங. ஐய நரப்பு – தொத்துவதும் தோய்ந்தாற்போலும், கோழி நடை, கொக்கினுறக்கம், ஊர்க்குருவி, சிலந்திப்பூச்சி போலும் நடக்கும்.

கோரக்கர்.

க. வளிச் சிரை – சிறு பிள்ளைத் தொட்டில், தவளைப் பாய்த்து போலும்,
உ. பித்தச் சிரை – அன்னம், மயில், கழுகு, புறாப் போலும்,
ங. ஐயச் சிரை – மீன்குத்திப்புள், கோழி, ஊர்க்குருவி போலும் நடக்கும்.

இரண்டாவது கண்.

வளிப்பிணியாளர்க்கு, கண் கருமையடைந்து நீர் பாயும்.
பித்தப்பிணியாளர்க்கு, கண் பசுமையடைந்து சிவப்புறும்.
ஐயப்பிணியாளர்க்கு, கண் வெளுமையடைந்து பீளைகொள்ளும்.

மூன்றாவது குரல்.

(க) வளி – சமகுரல். (உ) பித்து – பெருங் குரல். (ங) ஐயம் – சிறு குரல்.

நான்காவது உடம்பு.

(க) வளியுடல் – கருமை நிறம். (உ) பித்துடல் – மஞ்சள் நிறம்.
(ங) ஐயுடல் – வெண்மை நிறம்.

ஐந்தாவது ஊறு.

வளி ஊறு. சில்லுறுப்புக் குளிர்ந்தும், சில்லுறுப்பு வெம்மை கொண்டுங் கிடக்கும்.

பித்தூறு. உடம்பு முழுவதும் வெம்மையேயுறும்.

ஐயூறு. உடம்பு முழுவதும் குளிர்ச்சியேயுறும்.

ஆறவது நாக்கு.

வளிநா. கருமையும் வெடிப்பும் கொள்ளும்.

பித்தநா. பச்மையும் சிவப்பும் கொள்ளும்.

ஐயநா. வெளுத்து நீரோடும் என்க.

ஏழாவது மலம்.

வளிக்கு, பவ்வீ (மலம்) கட்டுற்றுக் கறுத்துக் காணும்.

பித்தக்கு, பவ்வீ மஞ்சள் கொண்டு குழைந்திருக்கும்.

ஐயத்துக்கு, பவ்வீ வெண்மைகொண்டு சீதம் விழும் என்க.

எட்டாவது உவரி (சிறு நீர்).

வளியாளர்க்கு, நீர் வெளுமையாய்த் தெளிவுறும்

பித்த நோயாளர்க்கு, நீர் மஞ்சள் சிவப்பு நிறங் கொள்ளும்.

ஐய நோயாளர்க்கு, நீர் சேறுபோல் நுரை கொள்ளும் என்க.

இது காறும் யாம் சங்கக் காலத்தினராகிய இரும்பிடர்த்தலையர், மருத்துவன் நல்லச்சுதனர், மருத்துவன் தாமோதரனர், இடைக்காடனர், திருமூலனர் முதலாயினரும், போகர், புலிப்பாணி, காலாங்கிநாதர், கோரக்கர், உரோமர், தன்வந்திரி, உயூகிமுனி முதலியவர்களும் தம் தம் நூல்களிற் காட்டியனவும் வழக்கவாராய்ச்சியுட்பட்டனவுமாய எண்வகை யாராய்ச்சியைச் சிறிது உரைத்தாம். அவைகளினுலும் உள்ளச் சூழ்ச்சியினுலும் மக்களின் கையினைப்பற்றி நரப்பாராய்ச்சி செய்ய வேண்டும். அப்படி ஆராயும்போது, ஆடவர்களின் வலது கையின் பெருவிரலை யொட்டினற்போல் மணிக்கட்டின்மேல் முதல் சுட்டுவிரல் நடுவிரல், அணிவிரல் பொருந்தவும், அடியில் பெருவிரல் பொருந்தவும் சிறுவிரல் நிமிர்ந்துமிருக்கும்மான் றலைக்கையில் பெருவிரலைக் கீழே பொருத்து மாறு பார்த்து வளி, பித்து, ஐயம் அறிவது முறையாகும். மகளிர்கட்கு இடது கையின் மணிக்கட்டை யொட்டிப் பார்ப்பதே தகுதியாகும்.

(க) புலரி நண்பகல் போழ்து று மாலையின்
வளியெனப் பித்தென வையென நரப்புகள்
வகை பெற நடக்கு மரபினவென்க.

(உ) சுட்டும் பேடு மணிவிர லதனை
யொட்டிக் காலையின் வலக்கை பற்றி
வளிபித் தைய மறிவது மரபே.

(ரு) அவற்றுள்
எழின் மூலை மகளிர்க் கியல்வதிடக்கை.

(இவை நாடி நூல்)

மருத்துவச் செய்திகளைச் சுருக்கச் சொல்லப் புகுவதினால் நோய்கட்கு நடக்கும் நரப்பியல்பு கூறி நோயில்பு கூறுவாம்.

மருத்துவன், திரு – சுப்பிரமணியனார்.

காவித்தண்டலம் சைவசித்தாந்த சபையின் ஐந்தாவது வருட மகோற்சவம்.

இச் சபையின் ஐந்தாவது வருட மகோற்சவமானது நாளது பிங்கள ஞு சித்திரை மீ கூ – கo-ம் உ, 1917-ம் ஆூ ஏப்ரல் மீ 21 – 22-ம் உ களில், செங்கல்பட்டுக்கடுத்த காவித்தண்டலம் கிராமத்தில், சென்னை அவ்ஷ்டாவதானம் சிவஸ்ரீ கலியாணசுந்தர யதீந்திரர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் அடியிற்கண்டபடி மிக விமரிசையாக நடைபெற்றது.

21 – 4 – 17 பகல் 2 மணிக்குச் சபை ஆரம்பித்தவுடன் ஷை சபையார் தமிழ் மறையோத ஷை யூர் வித்வான் ஸ்ரீமான் வேதாசலமுதலியார் அவர்களால் சபாநாயகர்க்கு வந்தனோபசாரமாக ஐந்து பாசுரங்கள் படிக்கப்பட்டன. சபையின் சென்ற வருட நடவடிக்கையும் வரவு செலவும் படிக்கப்பட்டபின், சபாநாயகர் அவர்கள் தமது ஆரம்பப் பிரசங்கத்தை மிக இனிமையாக ½ மணி நேரம் செய்தார்கள். ஷை யூர் ஸ்ரீமான் வேதாசல முதலியார் அவர்கள் “செந்தமிழ்ப்பயன்” என்பதைப் பீடிகையாகக்கொண்டு, உலகத்தில் வடமொழியைவிடத் தென்மொழி மிக வுபயோகமென்றும், தென்மொழியால் விளைந்துள்ள பயனும் அற்புதமும் வடமொழியால் விளையவில்லை யென்றும், பல சுருதி வாக்கியங்களை மேற்கோள்காட்டிக் கூறினர். பின் தண்டறை, ஸ்ரீமான் கதிர்வேலு முதலியார் அவர்கள், “ஒழுக்கம்” என்னும் விடயத்தை உபன்னியசிக்க ஆரம்பித்து, மனிதர்கள் பற்பல விதங்களிலும் நடந்துகொள்ளவேண்டிய ஒழுக்கங்களை மிகத் தெளிவாய் விளக்கிக் கூறினர். அதன் பின்னர், செங்கற்பட்டு, ஸ்ரீமான் பொன்மார்-நடேச முதலியார்

அவர்கள் "பெரியார் யார்" என்னும் விடயத்தைப் பீடிகையாகக் கொண்டு, பெரியார் என்பவர் இன்னின்ன நடையுடையவராய் இருக்க வேண்டுமென்று பலபாகுபாடுகள் செய்து கூறி, கடைசியில் சிவனடியார்கள்தான் பெரியார் என்று பேசி முடித்தார். பின்னர்ச் சென்னை முத்தியால்பேட்டை ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர், ஸ்ரீமான் மணி - திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் "சபைகளின் அமைப்பும் பயனும்" என்றெடுத்துக்கொண்டு, சபைகள் ஸ்தாபிக்கவேண்டிய அவசியமும், அவைகள் நடந்துகொள்ளவேண்டியமாதிரியும் இன்னமாதிரியென்று மிகவும் தெளிவாய்ப் பேசியதோடு அதன் பயனை மிகத் தெளிவாய்ப் பிரத்தியட்ச அனுபவத்தோடு கூறினர். அதன் பின்னர், காஞ்சீபுரம் புராணிகர் ஸ்ரீமான் சோணாசல பாரதி அவர்களால் கந்தபுராணத்துள் வள்ளியம்மை திருமணத்தைக் கேட்டோர் மனங்கசிய உபன்னியசித்தனர். அதன் பின்னர், சபாநாயகர் அவர்கள் முடிவுரைப் பிரசங்கத்தை மிகவும் அருமையாகவும் இனிமையாகவும் செய்த பின்னர் இரவு 9 மணிக்குச் சபை முடிந்தது.

இரண்டாவது நாள்.

22 - 4 - 17 பகல் 3 மணிக்குச் சபை ஆரம்பித்தது. தமிழ்மறையோதப்பெற்றபின், கட்டியாம்பந்தல் ஸ்ரீமான் சபாபதி முதலியார் அவர்கள் "செல்வம்" என்று எடுத்துக்கொண்டு, பொருட் செல்வம் கல்விச் செல்வம் அருட் செல்வம் எனப் பிரித்துக்கொண்டு, இம்மூன்று செல்வத்தாலும் இன்னின்னவிதப் பிரயோசனமுள்ளபடியால் ஒவ்வொருவருக்கும் இம் மூன்று செல்வமும் இன்றியமையாதனவென்று கூறி முடித்தனர். பின் ஷேயூர் ஸ்ரீமான் வேதாசல முதலியார் அவர்கள் "இன்பம்" என்றெடுத்துக்கொண்டு பலபாகுபாடுசெய்து கூறினர்.

பின்னர், அங்கம்பாக்கம் ஸ்ரீமான் நாராயணசாமிப்பிள்ளை அவர்கள் "கல்வி" என்றெடுத்துக்கொண்டு, கல்வியின் பயனையும் கல்வி ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததென்பதையும் மிகவும் விளக்கமாகக் கூறினர். அதன் பிறகு சீவரம் ஸ்ரீமான் கன்னிவேலு செட்டியார் அவர்கள் "விருந்தோம்பல்" என்றெடுத்துக்கொண்டு விருந்தோம்பலின் அவசியத்தையும், விருந்தோம்பவேண்டிய மாதிரியையும் விளக்கிக் கூறிய பின்னர், அக்கிராசனர் முடிவுரை கூறியதும், இரவு 9 மணிக்குப் பூர்த்தியடைந்தது.

சைவாபிமானி.

சபை ஸ்தாபகம்.

செங்கற்பட்டுக்கடுத்த காவித்தண்டலத்தில் நடந்த சைவசித்தாந்த சபைக்கு வந்திருந்த அன்பர்கள் பலருள், காஞ்சிபுரம் ஸ்ரீமான் பி. சே. முருகேச முதலியார் அவர்கள் ௸ காவித்தண்டலத்திற்கடுத்த ஓரக்காட்டுபேட்டை என்னும் கிராமத்தில் 22 - 4 - 17 பிங்கள ௵ சித்திரை ௴ 10-ம் ௳ ஒரு சபை ஸ்தாபித்தார்கள். அன்றிரவு ஸ்ரீகுணந்தந்த ஈசுரர் ஆலயத்தில் ௸ கிராமச் செங்குந்தர்கள் சுமார் 200 பேர் குழுமினார்கள். அப்பொழுது ௸ முதலியார் அவர்கள், இவ்வூரில் ஒரு சபையிருக்கவேண்டியது அவசியமென்றும், சபையினாலுண்டாகும் நன்மையின்னதென்றும் கூறியவுடன், ௸யூர் ஜனங்களெல்லாம் ஒருமனதாயும் சந்தோடமாயும் சபை ஸ்தாபிப்பதாக ஒப்புக்கொண்டபடி, ஸ்ரீ முத்துக்குமாரஸ்வாமி பக்தஜன சைவசித்தாந்த சபை என்கிற பெயரோடு ௸ சபையை ஸ்தாபித்தார். ௸ சபையில் பிரதிதினமும் தமிழ் வேதத் திருமுறைகள் பன்னிரண்டினையும் முறையே ஓதவேண்டும் என்றும், அடிக்கடி சைவபுராணப் பிரசங்கம் நடைபெறவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் ௸ முதலியார் அவர்களை தேவாரபாராயணத்தோடு காவித்தண்டலம் வரை கொண்டுவந்து விட்டார்கள். ௸ சபையானது மேன்மேலும் அபிவிருத்தி அடைய ஸ்ரீ முத்துக்குமாரஸ்வாமி கிருபை பாலிப்பாராக.

கண்டு களித்தோன்.

படிக்காசுப்புலவர் சரிதம்.

(வெண்டாமரை ௫, இதழ் ௩, 68-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதன் பின்னர், இவர் சிவதரிசனஞ் செய்வான் எண்ணிப் பல சிவஸ்தலங்களையும் தரிசித்து வணங்கிக்கொண்டு சிதம்பரமடைந்து, உபநிடதத்தின் உட்கருத்தை உள்ளடக்கி அமைத்த ஆலயத்தையும், அதற்குள் சிருஷ்டிக்கு முன்னும் பின்னும் ஒடுங்காத கடவுளின் ஆனந்த நிலைமையையும், ஆகாச ரூபத்தையும், ஆனந்தத் தாண்டவத்தையும், ஒருமித்து உருவகஞ்செய்திருக்கும் நடன சபாபதியையும், சிவகாமி அம்மையையும் தரிசித்து, சில பாடல்கள் இசைத்தனரென்ப. அப் பாடல்கள் இப்பொழுது காணப்படவில்லை. அதற்குப் பிரதியாக,

முடியாதகாரியங்களிவை யெனக் குறிக்கும்,

"பொல்லாத மூர்க்கருக் கெத்தனை தான்புத்தி போதிக்கினும்
நல்லார்க்குண் டான குணம்வரு மோநடு ராத்திரியிற்
சல்லாப் புடவை குளிர்தாங்கு மோநடுச் சந்தையினிற்
செல்லலுப் பணஞ்செல்லு மோதில்லை வாழுஞ் சிதம்பரனே."

என்னும் பாடல் காணப்படுகிறது.

சிவகாமி அம்மையார்மீது பாடியது.

"வேல்கொடுத் தாய்திருச் செந்தூரார்க் கம்மியின் மீதுவைக்கக்
கால்கொடுத் தாய்நின் மணவாள னுக்குக் கவுணியர்க்குப்
பால்கொடுத் தாய்மத வேளுக்கு மூவர் பயப்படச்செங்
கோல்கொடுத் தாயன்னை யேயெனக் கேதுங் கொடுத்திலையே."

எனப் பாடித் துதித்தவளவில், பாட்டுக்குவந்தருளும் பரமேட்டி தொண்டரின் அன்பின் திறத்திற்கு வந்து மகிழ்ந்து பஞ்சாக்ஷரப் படிமிசை ஐந்து பொற்காசு வைத்தருளினர். புலவர் போற்றிப் பணிந்து அருட் செயலை நினைந் தேத்தி ஆனந்தங்கொண்டனர். அது முதலாகவே இவரைப் "படிக்காசுப்புலவர்" என்று உலகம் புகழ்ந்து கூறத் தொடங்கியது. இவர் இயற்பெயர் இன்னதென விளங்கவில்லை.

இவர் இங்குநின்றும் நீங்கி இன்னதலத்தை யடைந்து வழிபட்டார், இன்னது செய்தாரென்னும் விபரம் முதலியன தெரிந்துகொள்வதற்கில்லை. பின்னர்க் கூறப்புகும் விஷயத்தால் இவர் திரிசிராப்பள்ளியையடுத்ததும், தமிழபிமானஞ் சிறந்ததும், புலவர்களை ஆதரிப்பதில் குறைவற்றதும், "மூந்து விஜயரங்க ஒப்பிலாத மழவராயர்," "குமார விஜய ஒப்பிலாத மழவராயர்" என்னும் பட்டப் பெயர்புனைந்த பாளையக்காரரால் ஆளப்பட்டதுமான "அரியலூர் ஜமீன்" சென்றொன்பதற்கும், அப்படியே கொங்குநாட்டில் யாத்திரைசெய்ததற்கும் இரண்டொரு ஆதாரங் காணப்படுகின்றன. இவைபோன்ற சிற்சில குறிப்புக்களைக் கொண்டு இப் புலவர் சரிதத்தை ஒருவாறு கூறி முடிக்கவேண்டுமன்றி முழுதும் வரிசைபெறத் தொகுத்து முற்றிய சரிதமாகக் கூறுவதற்கில்லை. நமது தமிழ் நாட்டுப் புலவர்கள் சரிதம் அனைத்தும், இவ்வாறே யமைந்துள்ளனவென்பது சரிதப் பரிசிலனைசெய்யும் அன்பர் அறிந்ததொன்றும். நிற்க.

இவர் அரியலூர் சென்றிருந்த சமயம் இவரை அபிமானித்த பிரபு காலவித்யாசத்தால் வருஷாந்தரமாகக் கொடுக்கவேண்டிய ஆயிரம் பொன்னைக் கொடாது ஐந்நூறு பொன்மட்டும் கொடுக்க, புலவர் அதனைப் பெறாது பிரபுவை நோக்கி,

"கனத்தசிராப் பளிதனிலே வடுகர் கூத்துக்
கட்டியா ளுவதாச்சுத் தஞ்சா வூரோ
டினைத்தமரா டியகாடு மிஞ்சிப் போச்சு
முனையும்போம் மூக்கும்போம் மைசூர்ப் பேச்சு
பினைற்றுறையூர் காய்ச்சலாம் வடதே சத்துப்
பேய்த்தலுக்க குடையாரோ கவிதை கேளார்
இனித்தமிழுக் கரியலூ ரென்றி ருந்தோ-
மிங்குஞ்சம் பளங்குறைந்தா லென்செய் வோமே."

என்றொரு கவிகூற, பிரபு மகிழ்ந்து ஆயிரம் பொன்னையுந் தந்து நல்லுரை புகன்று புலவரை வழிவிட்டனரென்ப.

அரியலூர் நீங்கிய இவர், "சந்தம்படிக்காசலாதொருவர் பகரொணுதே" என்ற புகழ்ச்சியை விளக்கும்பொருட்டுக் கொங்குநாட்டில் சஞ்சாரஞ் செய்துவருகையில், அக் கொங்குநாட்டில் அநேக வித்துவான்கள் அக்காலத்தில் பிரபலமாயிருந்ததால், இவர் சந்தக்கவியை மதியாமலும், இவருடன் "மசக்காளி மன்றுடி" என்றொரு பிரபல புலவர், அவருடன் கூடிய சில புலவர்களுடன் கல்விப்போர் நடாத்தித் தோல்வியுறச்செய்து இவர் பல்லக்கையும் பறித்துக்கொண்டனரென, **கொங்குமண்டலசதகம்** கூறுகிறது. அப் பாடல் வருமாறு:—

"நல்லார் புகழ்மசக் காளி கவசையில் நாவில்வசை
யெல்லாஞ் சொலிநிலை நில்லாமற் பல்லக் கிரவைப்பற்றிச்
சொல்லா லுயர்ந்த படிக்காசன் கட்டிச் சுமக்கக்கவி
வல்லா ரடித்துத் துரத்திய துங்கொங்கு மண்டலமே."

இதனால் மிக வருந்தி,

† "அஞ்சாலி மக்களுஞ் சாணுரும் பாணரு மம்பட்டருஞ்
செஞ்சாயக் காரரும் வேசையர் மக்களுஞ் செந்தமிழைப்
பஞ்சாகப் பன்னி யொருகாசுக் கோர்வண்ணம் பாடலுற்றார்
நஞ்சாகப் போச்சுதை யோநந் தமிழ்கொங்கு நாடெங்குமே."

(பழங்கவித்திரட்டு)

† "அஞ்சாலிச் சாதியும் வண்ணானுஞ் செட்டியு மம்பட்டனுஞ்
செஞ்சாயக் காரனும் வேசைச் சுதருந் தினங்கவியைப்
பஞ்சாகத் தூற்றி யரைக்காசுக் கோர்கவி பாடுவதால்
நஞ்சாகப் போயிற் றிராசாக் களுக்கெங்க ளற்கவியே"

(தனிச்செய்யுட்கோவை)

என மற்றோர் செய்யுளும் வழங்குகிறது.

என்னும் பாடலால் கொங்குநாட்டை யிகழ்ந்து கிழக்குவழிகொண்டு காவிரிநதியைக் கடக்கையில், முன்பு பகைகொண்டு வாதமியற்றிய புலவர்கள் செய்த சூனியவித்தையால் வருந்த நேரிட, தமக்கெதிரில் தோன்றிய கொடிமாடச்செங்குன்றூர் என்னும் திருச்செங்கோட்டு மலையைக் கண்டு அத் தலத்தை யடைந்து, உமைக்கொருபாகந் தந்த அர்த்தநாரீசுரப் பெருமானைத் தரிசித்து வணங்கி,

"எந்தை வருக வடகயிலைக் கிறைவா வருக விசைந்தெளியேன்
சிந்தா குலமே தவிர்த்தருளச் சிவனே வருக வறுமுகவன்
றந்தை வருக வெனதுகுலந் தழைக்க வருக தாரணியில்
அந்த மிகுந்த திருச்செங்கோட் டரசே வருக வருகவே." (6)

(வருகைப்பதிகம்)

"நன்று புன்று னினையாம னலியு நாயே னவையகற்றி
வென்றுள் பொன்று வுருவான விமலா வமலா மேதினியில்
அன்று யின்று யெவ்வுயிர்க்கு மாத ரமுமா யங்கமிரண்
டொன்றாய்நின்றாய் பணிப்பொருப்பி லுமையோர்பாக முடையோனே."

(உமைபாகப்பதிகம்)

என்னுந் திருப்பதிகங்க ளோதினர். வேண்டுவார் வேண்டியாங் கெய்துவிக்கும் வித்தகன் புலவர் மனக்கவலை யொழியக் கருணை பாலித்தனர். சில நாளங்கு வசித்திருந்தபோது திருச்செங்கோட்டுக்குச் சமீபத்திலுள்ள § "மோரூரில்" பிரபல பிரபுவும், தமிழபிமானியும், சிவநேசமும், ஈகையும் மிகுந்த குமாரசாமிக் காங்கேயரென்னும் ஓர் வேளாண்மரபினர், இவர் திருச்செங்கோட்டில் தாமதிப்பதைக் கேள்வியா னுணர்ந்து மகிழ்ந்து சென்று கண்டு புலவரைப் பலவிதமாக வுபசரித்துத் தமது மோரூருக்கு எழுந்தருளச்செய்து, அவ்வூரில் கோயில்

---

§ இவ்வூர் சேலம் ஜில்லா சங்ககிரிதுர்க்கம் ரயில்வேஸ்டேஷனுக்குச் சமீபத்திலிருக்கிறது. இத் தலம் சிறந்ததென்பதற்கு அடியில் பாடலைச் சான்றாகக்கொள்க.

"நான்மறைப்பண் கேட்டுருகு நல்லான் மடிவழியும்
பான்மடை யீதைய பல்கலைதேர் — வான்புலவர்
மாளுகத் தாற்கடைய வாய்க்கா லெனப்பெருகு
மோரூரமென்றூர்முனம்."

கொண்ட "ஸ்ரீ புஜங்கபூஷணர்" என்னும் ¶ பாம்பலங்காரர்மீது ஓர் பிரபந்தம் பாடுமாறு வேண்ட, புலவர் பிரபுவின் விருப்பத்தின்படி 600 செய்யுளில் "பாம்பலங்கார வருக்கக்கோவை" யென்னும் பிரபந்தத்தை இயற்றி முடித்தனர். பிரபு மிக மகிழ்ந்து புலவர் புலமைக்கும், பெருமைக்கும் ஏற்றவாறு பலவித சன்மானஞ்செய்து தந்தச்சிவிகையுந் தந்து சிறப்பித்தனரென்ப. இவ்வுண்மை அடியில் வரும் செய்யுட்களால் தெளிவாம். அப் பாடல்கள் வருமாறு:—

"காரூர் பொழிறிகழ் மோரூரிற் பாம்பலங் காரரின்மேற்
சீரூர் வருக்கத் தொடைமாலை யன்புறச் செப்பினனால்
நீரூர் புடவிக் கவிவாணர் வாழ்த்த நிமிர்களந்தைப்
பேரூர் வருபடிக் காசனென் றோது பெரியவனே."

"அந்திப் பிறைச்சடை யாரார வாசல ராலயத்திற்
கந்தப் பிரான்கதை கற்சிலை யாலமை காங்கெயரில்
விந்தைப் புயக்கும ரேந்திர வேந்து வியந்தெமக்குத்
தந்தச் சிவிகை கொடுத்தான் பெரும்புகழ் தாங்கினனே."

(தொடரும்.)

சி. கு. நாராயணசாமி முதலியார்,

கோயமுத்தூர்.

¶ சிவபெருமானுக்குப் பாம்பலங்காரர் என்னும் பெயருண்டென்பது திருவாசக மருளிய மணிவாசகப்பெருமான் "திருக்கோவை"யாரில்,

(நலம்புனைந்துரைத்தல்)

"கூம்பலங் கைத்தலத் தன்பரென் பூடுரு கக்குனிக்கும்
பாம்பலங் காரப் பரன்றில்லை யம்பலம் பாடலரிற்
றேம்பலஞ் சிற்றிடை யீங்கிவ டீங்கனி வாய்கமழு
மாம்பலம் போதுள வோவளி காணு மகன்பணையே." (11)

என வருஞ்செய்யுளா லறிக.

ஜனோபகாரி.

பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கென்றே உழைத்துவரும் ஓர் சிறந்த தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

இப் பத்திரிகையில் கல்வி யபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், இந்திய வியவசாயத்தைப்பற்றிய பல விஷயங்கள், கைத்தொழில், வியாபாரம், கூட்டுறவு, ஜனஸமூஹத்தின் அபிவிருத்திக்குரிய பல விஷயங்கள், சிறந்த நீதிகளைப் போதிக்கக்கூடிய நாவல்கள், நாடகங்கள், மாணவர்களுக்கு உபயோகமான வியாசங்கள், நம் தேசத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட மகான்களின் ஜீவிய சரித்திரங்கள், ஸ்திரீகளுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகமான பல நற்போதங்கள் ஆகிய பல விஷயங்களைக் குறித்துச் சிறந்த கற்றறிந்தவர்களால் வியாசங்கள் எழுதப்பட்டு வருகின்றன. நடை தெளிவானது: சிறுவர் சிறுமியர் முதலிய யாவரும் சுலபமாய்ப் படித்தறியக்கூடியது.

வருஷ சந்தா	இந்தியா, பர்மா, சிலோனுக்கு	ரூ.	3—0—0
விகிதம்.	வெளி நாடுகளுக்கு	,,	4—8—0

ஔவை.

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதி நூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம். பல நூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ணபரம்பரையை அநுசரித்தும் வேலூர் வூரீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் எழுதப்பட்டது.

விலை அணா 6.

"ஜனோபகாரி" சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 5.

காரைக்காலம்மை சரிதை.

கற்பிலும் ஈசுவரபக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக் கவிஞருமாகிய காரைக்காலம்மையென்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம்.

விலை அணா 1.

மானேஜர்,

ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.

வெண் குஷ்டத்திற்கு நிவாரணம்.

அற்புதமான மருந்து.

மேல் பிரயோகத்தினாலேயே ஒருவாரத்திற்குள் வியாதி நிவர்த்தியாவது நிச்சயம். உடம்பில் எரிச்சல் முதலியவைகள் உண்டாகமாட்டா. எல்லாத் தேகிகட்கும் ஒத்ததா-யிருக்கும். ஒரு புட்டி விலை ரூபா 2. ஒன்று முதல் மூன்று புட்டி வரைக்கும் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

ஆயுர் வேத வைத்திய மருந்துகளின் விவர ஜாப்தா வேண்டியவர்ளுக்கு இனாமாக அனுப்பப்படும்.

P. சுப்பராய்,

ஆயுர் வேத வைத்திய சாலை,

தஞ்சாவூர்.

ஆர்டர் செய்யும்போது இப் பத்திரிகையின் பெயரைக் கண்டு எழுதவும்.

To Let.

தேகாரோக்கியம் திரண்ட செல்வம் தீர்க்காயுள்	இவைகள்	ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உப யோகிப்போருக்கு உண்டாகின்றன

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

எவ்வித காரணத்தாலும் ஏற்படுகிற பலஹீனத்தைப்போக்கி அதி சீக்கிரத்தில் சாசுவதமான குணத்தைக் கொடுக்கும்படி தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

அவைகள் ஆரோக்கியமான பசி தீபனத்தைக் கொடுத்து, தேகத்துக்கும் மனதுக்குமுள்ள பலஹீனத்தை நீக்கி, கெட்ட ரத்தத்தை சுத்திகரித்து ஞாபக சக்தியைத் தீட்சணியப்படுத்துகிறது.

சரீரத்தில் சளைத்துப்போன நரம்பு ஸ்தானங்களை ஆறுதல் செய்து லகுவான ஜீரணசக்தியைக்கொடுத்து, அவயவங்களுக்குத் தக்க திடத்தையும், ஊக்கத்தையும் கொடுத்து, இளமையிலுள்ள அழகை அடையும்படி செய்கிறது.

இந்த மாத்திரைகள் பொதுவாக அங்கங்கள்தோறும் சக்தியைக் கொடுக்கும் சிறந்த பலவிருத்தி மருந்து. இவைகளின் குணத்துக்கு இதர மருந்துகள் இணையாகாது. இன்னும் சரீர சத்ருக்கள் அணுகாவண்ணம் வைரக் கோட்டையைப்போல் செய்து காப்பாற்றுகின்றன.

ஒரு டப்பியை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். அவைகள் "பகற் போஜனத்துக்குப் பிறகு தங்கம்போலும், இராப் போஜனானந்தரம் ரத்னம்" போலுமுள்ளது.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1. இன்னும் எங்கள் மருந்தின் மகத்துவத்தை அறிய விரும்புவோர் எங்கள் புதிய காட்லாக்குக்கு எழுதுங்கள். இனாமாய் அனுப்புகிறோம்.

வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே 96, மவுண்ட் ரோட், மதராஸ்.